**கூடுதல் மகிளா நீதிமன்றம், பெரம்பலூர்**

முன்னிலை : திருமதி.G.ரேஷ்மா, பி.எஸ்.சி.. பி.எல்.,
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம், பெரம்பலூர்.

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18 ஆம் தேதி சனிக்கிழமை

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.238/2016**

(CNR No.TNPB02-000539-2016)

அரசுக்காக
காவல் உதவி ஆய்வாளர்,
மங்களமேடு காவல் நிலையம்,
குற்ற எண்.356/2012. ... குற்ற முறையீட்டாளர்

/எதிர்/

A1. ரமேஷ், வயது 32/2012,
த/பெ.கோபால்,

A2. கோபால், வயது 55/2012,
த/பெ.மாக்கான்,

**எதிரிகளின் முகவரி**
தெற்கு தெரு,
தேவையூர் கிராமம்,
வேப்பந்தட்டை தாலுகா,
பெரம்பலூர் மாவட்டம். ... எதிரிகள்

(மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் 07.04.2021ம் தேதியிட்ட R.O.C.No.814/2020/ RG /F1 ன் படி இவ்வழக்கில் கீழ்க்கண்ட விவரங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன.)

| வ. எண் | பொருள் | விவரம் | |
|---|---|---|---|
| 1. | குற்றம்சாட்டப்பட்டவர் / எதிரிகள் நீதிமன்ற காவலில் வைக்கப்பட்ட காலம் | (1 ஆம் எதிரி நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். 2 ஆம் எதிரி நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்படவில்லை) | |
| | | காவலில் வைக்கப்பட்ட தேதி | விடுவிக்கப்பட்ட விவரம் & தேதி |
| | | A1-23.08.2012<br><br>A2- | 27.08.2012<br><br>03.09.2012(AB) |



RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.04.18 16:24:37 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| 2. | நீதிமன்றத்தில் புகார்/இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட தேதி | 29.07.2016 | | |
| 3. | அமர்வு நீதிமன்றத்திற்கு வழக்கினை சமர்ப்பித்த தேதி | இல்லை | | |
| 4. | குவிமுச பிரிவு 240 இன் கீழ் குற்றம் சாட்டப்பட்டவரிடம் / எதிரிகளிடம் விசாரிக்கப்பட்ட தேதி | 240 Crpc on<br>நாள் :25.02.2019 | | |
| 5. | இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட அனைத்து மனுக்களின் (குவிமுச பிரிவு 317–ன் கீழான மனு தவிர) மீதான உத்தரவு விபரம் (இந்நீதிமன்றத்தில் உத்தரவுக்கு எதிரான மேல்முறையீட்டில் மேலமை நீதிமன்றங்கள் வழங்கிய உத்தரவு உட்பட) | 1.M.P.No. 16 of 2025 Dt :10.11.2025<br>Surrender petition–Accepted.<br>2.M.P.No. 15 of 2025 Dt :10.11.2025<br>Advance hearing petition–Allowed.<br>3.M.P.No. 17 of 2025 Dt : 10.11.2025<br>U/s. 70(2) Cr.P.C–Allowed.<br>4.Crl.M.P.No. 8117 of 2012 Dt : 27.08.2022<br>U/s. 437 Cr.P.C–Allowed.<br>5. Crl.M.P.No. 497 of 2026 Dt : 15.04.2026<br>U/s. 320 (2) Cr.P.C– Dismised.<br>6. M.P.No. 304 of 2026 Dt : 11.03.2026<br>U/s. 311 Cr.P.C–Allowed. | | |
| 6 | சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்த தேதி | சாட்சிகள் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | அ.சா.1<br>அ.சா.2<br>அ.சா.3<br>அ.சா.4 | 07.01.2026<br>07.01.2026<br>07.01.2026<br>15.04.2026 | இல்லை<br>15.04.2026<br>15.04.2026<br>15.04.2026 |
| 7 | எதிரிகளிடம் குவிமுச பிரிவு 313(1)(b)–இன் கீழ் வினா வினவப்பட்ட தேதி | 18.04.2026 | | |
| 8. | எதிரிகள் தலைமறைவு குறித்த விபரம் மற்றும் எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்ட/ தோன்றிய விபரம் | தலைமறைவு ஏதும் இல்லை. | | |
| 9. | இவ்வழக்கில் மேலமை நீதிமன்றம் பிறப்பித்த தடை உத்தரவு ஏதேனும் இருப்பின் அது குறித்த விவரம் | தடை உத்தரவு ஏதும் இல்லை | | |

இவ்வழக்கானது 29.07.2016 ஆம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இதுநாள்வரை விசாரணையில் இருந்து வந்து 18.04.2026 ஆம் தேதியன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது அரசுத் தரப்பில் கற்றறிந்த கூடுதல் குற்றவியல் பொது வழக்கறிஞர் திரு. சுரேஷ் அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. A.இளையராஜா அவர்கள் முன்னிலையாகியும்



RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.04.18 16:24:43 +0530

எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களை கேட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்..

**<u>தீர்ப்புரை</u>**

**<u>அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:</u>**

1. கடந்த 22.08.2012 ஆம் தேதி வாதி முத்தம்மாள், வாதியின் கணவர் இருவரும் தங்கள் வயலில் மாலை 14.45 மணிக்கு பருத்திவிதை ஊன்றி கொண்டு இருக்கும்பேபாது எதிரிகள் இருவரும் சேர்ந்து கொண்டு வாதியையும் வாதியின் கணவரையும் தேவடியா கண்டார ஓழி, கண்டார ஓழி பசங்களா என்று திட்டியும் உங்களுக்கு இங்கு என்னடா காடு உள்ளது என்று காமகுரோமான வார்த்தைகளால் திட்டியும் 2 ஆம் எதிரி வாதியை முடியை பிடித்து இழுத்து கன்னத்தில் அரைந்துள்ளார் என்றும் வாதி சத்தம்போட கையால் அங்கு கிடந்த வேப்பங்கட்டையை எடுத்து வாதியின் தலையில் வலது பக்கம் பின்புறம் ஓங்கி அடித்துள்ளார் என்றும் இதில் வாதிக்கு இரத்தகாயம் ஏற்பட்டுள்ளது என்றும் 1 ஆம் எதிரி வாதியின் கன்னத்தில் அறைந்தும், காலால் எட்டி உதைத்தும் பச்சமுத்துவை தென்னை மட்டையால் இடது முன்னங்கையில் அடித்து காயப்படுத்தியுள்ளார் என்றும் 2 ஆம் எதிரி வாதியின் கணவரை அறைந்தும், அங்கு கிடந்த வேப்பங்கட்டையில் இடது கால் ஓரமாக அடித்து காயப்படுத்தியும் எதிரிகள் இருவரும் சேர்ந்து தங்கள் கையில் வைத்திருந்த வேப்பங்கட்டைகளை காட்டி கொன்றுவிடுவதாக கொலைமிரட்டல் விடுத்துள்ளார்கள் என்றும் எனவே 1 ஆம் எதிரியின் செய்கையானது இ.த.ச. 294(b), 323, 324, 354, 506(2) ஆகிய பிரிவுகளின் கீழும், 2 ஆம் எதிரியின் செய்கையானது இ.த.ச. 294(b), 323, 324, 354, 506(2) ஆகிய பிரிவுகளின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக மங்களமேடு காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளரால் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>குற்றவியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 207 இன் கீழ் நகல் வழங்குதல்</u>**

2. இந்நீதிமன்றத்தால் அழைப்பாணை சார்வு செய்யப்பட்டு, இந்நீமன்றத்தில் முன்னிலையான 1, 2 எதிரிகளுக்கு கு.வி.மு.ச பிரிவு 207 இன்படி அரசுத் தரப்பில் வழக்கு ஆவணங்களின் நகல்களை இலவசமாக வழங்கப்பட்டது.

**<u>குற்றச்சாட்டுக்கள் வனைந்து குற்றம் பற்றி வினவுதல்</u>**

3) 1, 2 எதிரிகளுக்கு போதிய கால அவகாசம் கொடுத்து, 1 ஆம் எதிரியின் மீது இ.த.ச. 294(b), 323, 324 (2 Counts), 354, 506(2) ஆகிய பிரிவுகளின் கீழும், 2 ஆம்



RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.04.18 16:24:48 +0530

எதிரியின் மீது இ.த.ச. 294(b), 323, 324, 506(2) ஆகிய பிரிவுகளின் கீழும், குற்றச்சாட்டுகள் வனைந்து குற்றங்கள் குறித்து, வினவியபோது 1, 2 எதிரிகள் குற்றத்தை மறுத்து குற்றவாளிகள் இல்லை எனவும் வழக்கு விசாரிக்கபட வேண்டும் என்று கோரியதால் வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

**<u>அரசுத் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் விவரம்</u>**

4. அரசுத் தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிரிகள் தரப்பில் சாட்சியங்களோ, சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தப்படவில்லை.

**<u>அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம் :-</u>**

5. சம்பவ சாட்சியான அ.சா.1 மணிகண்டன் தனது நீதிமன்ற இந்த வழக்கு சம்மந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும் போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் கூறி அரசு தரப்பு வழக்கினை ஆதரிக்காமல் பிறழ் சாட்சியாகிவிட்டார்.

6. இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.2 முத்தம்மாள் தனது சாட்சியத்தில் கடந்த 2012ம் வருடத்தில் ஒரு நாள் தான் தேவையூரில் உள்ள தனது வயல்காட்டில் பருத்தி விதை மதியம் 12 மணியளவில் விதைத்துக் கொண்டிருந்தேன் என்றும் அப்போது ஆஜர் 1ம் எதிரி அங்கே வந்து இது எங்கள் காடு என்று கூறி தான் விதைத்த பருத்தி விதையை பிடுங்கி எறிந்துவிட்டு அசிங்கமான வார்த்தைகளான கண்டார ஓழி, வல்லார ஓழி என்று பேசி வேப்பங்கட்டை குச்சியால் அடித்தார் என்றும் தன்னுடைய மண்டை உடைந்துவிட்து என்றும் கோபால் என்பவர் பச்சைமட்டையால் தன்னை அடித்தார் என்றும் அப்போது தன்னுடைய கணவரை ரமேஷ் என்பவர் உயிர்நிலையில் உதைத்தார் என்றும் தன் கணவர் கீழே விழுந்துவிட்டார் என்றும் ரமேஷ் தன் கணவரை கண்ணத்தில் அடித்தார் என்றும் தனக்கு மண்டை உடைந்துவிட்டது என்றும் தாங்களாக மருத்துவமனைக்கு சென்றோம் என்றும் எதிரிகள் இருவரும் தங்களுடைய சொத்தை தங்களை அடித்துவிட்டு எடுத்துச் செல்லும் நோக்கத்தில் அங்கு வந்தார்கள் என்றும் வேறு எதுவும் சொல்லவில்லை என்றும் காயத்திற்காக மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்த போது போலிசார் விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றார்கள் என்றும் அதில் தான் கைரேகை வைத்தேன் என்றும் தான் மயக்கநிலையில் இருந்தேன் என்றும் போலிசாரிடம் அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலம் தான் கொடுத்தேன் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

RESHMA Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.04.18 16:24:53 +0530

7. சம்பவ சாட்சியான அ.சா.3 அ.சா.3 பச்சைமுத்து தனது சாட்சியத்தில் கடந்த 2012ம் வருடத்தில் தானும் அ.சா.2ம் ஒரு நாள் தேவையூரில் உள்ள தங்கள் வயல்காட்டில் பருத்தி விதை மதியம் 2 மணியளவில் விதைத்துக் கொண்டிருந்தோம் என்றும் அப்போது அங்கு வந்த கோபால் தன் மனைவியை தடிக்குச்சியால் தலையில் அடித்ததில் தலைபிளந்து விட்டது என்றும் கண்ணாபிண்ணா வார்த்தைகளான கண்டார ஓழி, வல்லார ஓழி என்று சொல்லி திட்டினார் என்றும் அந்த சம்பவத்தை தான் விளக்கச் சென்ற போது தன்னுடைய இடது முழங்கையில் கோபால் தடியால் அடித்தார் என்றும் அதனால் தனக்கு இடது முழங்கையில் இரத்தம் வடிந்தது என்றும் அப்போது ரமேஷ் வந்து அங்கு வந்து தன்னுடைய உயிர்நிலையில் எட்டி உதைத்தார் என்றும் தான் கீழே விழுந்து மயக்கமானேன் என்றும் தங்களை கண்ணாபிண்ணா என்று திட்டினார்கள் என்றும் தங்களுக்கு வலி பொறுக்க இயலாத நிலையில் இருந்ததால் பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றோம் என்றும் புகார் கொடுத்தோம் என்றும் போலிசார் வழக்கு பதிவு செய்து தங்களை விசாரித்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

8. அ.சா.4 திலகவதி (தலைமைக்காவலர்) தனது சாட்சியத்தில் இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் நடராஜன் ஆவார் என்றும் தான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் கடந்த 23.08.2018ம் தேதி சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் பணியிலிருந்த போது பச்சைமுத்து மனைவி முத்தம்மாள் என்பவர் பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் அடிதடி வழக்கு சம்மந்தமாக சிகிச்சையிலிருப்பதாக கிடைத்த தகவலின் பேரில் மருத்துவமனை சென்று முத்தம்மாளிடம் வாக்குமூலம் பெற்று வந்து மங்களமேடு காவல் நிலைய குற்ற எண் 356/2012. இதச பிரிவுகள் 294(b), 323, 324, 354, 506(2) ன்படி சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் எதிரிகளின் மீது அ.சா.ஆ.2 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றும் வழக்கு கோப்பினை புலன்விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் சம்பவயிடத்திற்கு 23.08.2012ம் தேதி சென்று சாட்சிகள் கலைராஜ், கொளஞ்சி ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடம் குறித்து அ.சா.ஆ.3 பார்வை மகஜர், அ.சா.ஆ.4 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார் என்றும் பின்னர் சாட்சிகள் முத்தம்மாள். பச்சைமுத்து, மணிகண்டன். மருதமுத்து கலைராஜ், கொளஞ்சி ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும் இந்த வழக்கின் எதிரி ரமேஷ் என்பவரை கைதிற்கான காரணம் கூறி கைது



RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.04.18 16:24:57 +0530

செய்து அடைப்பு காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார் என்றும் மற்றொரு எதிரி கோபால் முன்பிணை பெற்றுள்ளதால் அவரை கைது செய்யவில்லை என்றும் காயம்பட்ட புகார்தாரர் மற்றும் பச்சமுத்து இருவருக்கும் சிகிச்சை அளித்த அரசு மருத்துவர் அர்ஜீனன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும் (முத்தும்மாளின் விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றுகள் அ.சா.ஆ 5 மற்றும் அ.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பச்சமுத்துவின் விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றுகள் அ.சா.ஆ 7 மற்றும் அ.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது) இறுதியாக புலன் விசாரணை முடித்து எதிரி மீது பிரிவுகள் 294(b), 323, 324, 354, 506(2) ன்படி இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 313 (1) (ஆ)இன் கீழ் வினவுதல்**

9. அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து 1, 2 எதிரிகளுக்கு பாதகமாக அமைந்துள்ள சாட்சியங்களையும், சூழ்நிலைகளையும் கு.வி.மு.தொ. பிரிவு 313 (1) (ஆ)இன் கீழ் 1, 2 எதிரிகளிடம் விளக்கிக் கூறி வினவியபோது 1, 2 எதிரிகள் அவற்றை மறுத்துரைத்துள்ளனர். மேலும் எதிரிகள் தங்களது தரப்பில் சாட்சிகள் இல்லை என்று தெரிவித்து எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது. சான்றுப்பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**அரசுத் தரப்பு வாதம்**

10. அரசுத்தரப்பு வழக்கறிஞர் அவர்களால் அ.சா.1 முதல் அ.சா.4 வரையான சாட்சிகள் மூலமும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் மூலமும் 1, 2 எதிரிகள் மீதான குற்றம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே, சாட்சியங்களின் அடிப்படையில் 1, 2 எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும் வாதிட்டார்.

**எதிரிகள் தரப்பு வாதம்**

11. இதனை மறுத்து எதிரிகள் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், 1, 2 எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றும், அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட புகார்தாரரான அ.சா.1 சாட்சி பிறழ் சாட்சி ஆகிவிட்டார் என்றும், 1, 2 எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் வகையில் சாட்சியம் யாரும் அளிக்கவில்லை என்றும், எனவே, சந்தேகத்தின் பலனை 1, 2 எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை விடுதலை செய்து உத்தரவிட வேண்டும் என்று வாதிட்டார்.

RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.04.18 16:25:02 +0530

12. இவ்வழக்கின் தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில் 1, 2 எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் அரசுத் தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

**<u>தீர்வு</u>**

13. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் கவனமாகப் பரிசீலிக்கப்பட்டது. கடந்த 22.08.2012 ஆம் தேதி வாதி முத்தம்மாள், வாதியின் கணவர் இருவரும் தங்கள் வயலில் மாலை 14.45 மணிக்கு பருத்திவிதை ஊன்றி கொண்டு இருக்கும்பேபாது எதிரிகள் இருவரும் சேர்ந்து கொண்டு வாதியையும் வாதியின் கணவரையும் தேவடியா கண்டார ஓழி, கண்டார ஓழி பசங்களா என்று திட்டியும் உங்களுக்கு இங்கு என்னடா காடு உள்ளது என்று காமகுரோமான வார்த்தைகளால் திட்டியும் 2 ஆம் எதிரி வாதியை முடியை பிடித்து இழுத்து கண்ணத்தில் அரைந்துள்ளார் என்றும் வாதி சத்தம்போட கையால் அங்கு கிடந்த வேப்பங்கட்டையை எடுத்து வாதியின் தலையில் வலது பக்கம் பின்புறம் ஓங்கி அடித்துள்ளார் என்றும் இதில் வாதிக்கு இரத்தகாயம் ஏற்பட்டுள்ளது என்றும் 1 ஆம் எதிரி வாதியின் கண்ணத்தில் அறைந்தும், காலால் எட்டி உதைத்தும் பச்சமுத்துவை தென்னை மட்டையால் இடது முன்னங்கையில் அடித்து காயப்படுத்தியுள்ளார் என்றும் 2 ஆம் எதிரி வாதியின் கணவரை அறைந்தும், அங்கு கிடந்த வேப்பங்கட்டையில் இடது கால் ஓரமாக அடித்து காயப்படுத்தியும் எதிரிகள் இருவரும் சேர்ந்து தங்கள் கையில் வைத்திருந்த வேப்பங்கட்டைகளை காட்டி கொன்றுவிடுவதாக கொலைமிரட்டல் விடுத்துள்ளார்கள் என்றும் அரசுத் தரப்பு வழக்கு அமைந்துள்ளது. எதிரிகள் தரப்பில் வழக்கில் சொல்லப்பட்டுள்ள குற்றங்கள் எதையும் 1, 2 எதிரிகள் செய்யவில்லை என்றும், அரசுத் தரப்பு வழக்கானது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே, எதிரிகளை விடுதலை செய்ய வேண்டும் என்றும் எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட இருதரப்பு வாதங்களின் அடிப்படையில் பின்வருமாரு எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு தீர்வு காணப்படுகிறது.

14. 1, 2 எதிரிகளுக்கு எதிரான **இதச பிரிவு 294(b)** ன் கீழ் குற்றச்சாட்டினை நிரூபிக்கப்பட வேண்டும் என்றால், **"ஒரு பொது இடத்தில் அல்லது அதற்கு அருகில் ஆபாசப்பாடல்கள், கதைப்பாடல் அல்லது சொற்கள் எதையும் பாடுகிற, ஒப்பிக்கிற, அல்லது மொழிகிற செயல் செய்திருக்க வேண்டும்"** என்ற நிலையில், எதிரிகளுக்கு எதிரான மேற்படி குற்றச்சாட்டு குறித்து ஆராய்கையில், புகார்தாரரான அ.சா.2 ராஜகுமாரி



RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.04.18 16:25:07 +0530

தனது சாட்சியத்தில் 1ம் எதிரி இது எங்கள் காடு என்று கூறி தான் விதைத்த பருத்தி விதையை பிடுங்கி எறிந்துவிட்டு தன்னை அசிங்கமான வார்த்தைகளான கண்டார ஓழி, வல்லார ஓழி என்று பேசியதாக சாட்சியமளித்துள்ள போதிலும், அ.சா.2 தனது குறுக்கு விசாரணையில் "**வழக்கு பற்றிய விவரங்கள் எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரங்கள் எல்லாம் போலிசார் சொல்லிக் கொடுத்து தான் சொன்னேன் என்றால் சரிதான். இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரிதான்"** என்று தனது முதல் விசாரணை சாட்சியத்திற்கு முரண்பட்டு சாட்சியமளித்துள்ளார். மேலும் அ.சா.2 தனது சாட்சியத்தில் 2 ஆம் எதிரி தன்னை அசிங்கமாக பேசியதாக சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. புகார்தாரரின் கணவரான அ.சா.3 பச்சைமுத்து மற்றும் சம்பவ சாட்சியான அ.சா.1 மணிகண்டன் ஆகியோர் தங்களது சாட்சியத்தில் எதிரிகள் அ.சா.2 ஐ அசிங்கமாக பேசியதாக சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. எனவே 1, 2 எதிரிகளுக்கு எதிரான மேற்படி குற்றச்சாட்டினை அரசு தரப்பில் மேற்படி பிரிவின் உட்கூறுகளுக்கு உட்பட்டு நிரூபிக்கபடவில்லை என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

15. 1, 2 எதிரிகளுக்கு எதிரான **இதச பிரிவு 323** ன் கீழ் குற்றச்சாட்டினை நிரூபிக்கப்பட வேண்டும் என்றால், **"ஒருவர் மற்றொருவருக்கு தன்னிச்சையாக சொற்பக்காயம் விளைவித்திருக்க வேண்டும்"** என்ற நிலையில், 1, 2 எதிரிகளுக்கு எதிரான மேற்படி குற்றச்சாட்டு குறித்து ஆராய்கையில், புகார்தாரரான அ.சா.2 ராஜகுமாரி தான் அளித்த அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தில் 1, 2 எதிரிகள் தன்னை கன்னத்தில் அறைந்ததாகவும், 1 ஆம் எதிரி தனது கணவரை கன்னத்தில் அறைந்ததாகவும் குறிப்பிட்டுள்ளபோதிலும், அ.சா.2 தனது சாட்சியத்தில் 1, 2 எதிரிகள் தன்னை கன்னத்தில் அறைந்ததாக சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. மேலும் அ.சா.2 ன் கணவரான அ.சா.3 பச்சமுத்து 1 ஆம் எதிரி தன்னை கன்னத்தில் அறைந்ததாக சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. எனவே 1, 2 எதிரிகளுக்கு எதிரான மேற்படி குற்றச்சாட்டினை அரசு தரப்பில் மேற்படி பிரிவின் உட்கூறுகளுக்கு உட்பட்டு நிரூபிக்கபடவில்லை என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

16. 1, 2 எதிரிகளுக்கு எதிரான **இதச பிரிவு 324 ன்** கீழ் குற்றச்சாட்டினை நிரூபிக்கப்பட வேண்டும் என்றால், **"இதச 334 வது பிரிவில் வகை செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் தவிர, சுடுவதற்கு, குத்துவதற்கு அல்லது வெட்டுவதற்கான கருவி**



RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.04.18 16:25:12 +0530

**எதன் மூலமேனும், அல்லது எந்தக் கருவியைத் தாக்கும் கருவியாகப் பயன்படுத்தினால் அநேகமாக மரணம் விளைவிக்கக்கூடுமோ அந்தக் கருவி எதன் மூலமேனும், அல்லது நெருப்பு அல்லது சுடுபொருள் எதன் மூலமேனும் நஞ்சு, அல்லது அரிக்கும் தன்மையுள்ள பொருள் எதன் மூலமேனும், அல்லது வெடிக்கும் பொருள் எதன் அல்லது மூச்சிழுத்தால், விழுங்கினால் அல்லது இரத்தத்தில் ஏற்றால் மனித உடலுக்குத் தீங்கு விளைவிக்கிற பொருள் எதன் மூலமேனும், அல்லது விலங்கு எதன் மூலமேனும், தன்னிச்சையாகக் காயம் விளைவித்திருக்க வேண்டும் "** என்ற நிலையில், 1, 2 எதிரிகளுக்கு எதிரான மேற்படி குற்றச்சாட்டு குறித்து ஆராய்கையில், புகார்தாரரான அ.சா.2 ராஜகுமாரி தனது சாட்சியத்தில் 1 ஆம் எதிரி வேப்பங்கட்டை குச்சியால் அடித்தார் என்றும் தன்னுடைய மண்டை உடைந்துவிட்டது என்றும் கோபால் என்பவர் பச்சைமட்டையால் தன்னை அடித்தார் என்றும் சாட்சியமளித்துள்ளபோதிலும், அ.சா.2 தனது குறுக்கு விசாரணையில் "**வழக்கு பற்றிய விவரங்கள் எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரங்கள் எல்லாம் போலிசார் சொல்லிக் கொடுத்து தான் சொன்னேன் என்றால் சரிதான். இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரிதான்"** என்று தனது முதல் விசாரணை சாட்சியத்திற்கு முரண்பட்டு சாட்சியமளித்துள்ளார். மேலும் அ.சா.3 பச்சமுத்து தனது சாட்சியத்தில் தன்னுடைய இடது முழங்கையில் கோபால் தடியால் அடித்தார் என்றும் அதனால் தனக்கு இடது முழங்கையில் இரத்தம் வடிந்தது என்றும் அப்போது ரமேஷ் வந்து தன்னுடைய உயிர்நிலையில் எட்டி உதைத்தார் என்றும் சாட்சியமளித்துள்ளபோதிலும், அ.சா.3 தனது குறுக்கு விசாரணையில் "**வழக்கு பற்றிய விவரங்கள் எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரங்கள் எல்லாம் போலிசார் சொல்லிக் கொடுத்து தான் சொன்னேன் என்றால் சரிதான். இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரிதான்"** என்று தனது முதல் விசாரணை சாட்சியத்திற்கு முரண்பட்டு சாட்சியமளித்துள்ளார். எனவே 1, 2 எதிரிகளுக்கு எதிரான மேற்படி குற்றச்சாட்டினை அரசு தரப்பில் மேற்படி பிரிவின் உட்கூறுகளுக்கு உட்பட்டு நிரூபிக்கபடவில்லை என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.04.18 16:25:17 +0530

17. 1 ஆம் எதிரிக்கு **எதிரான இதச பிரிவு 354** ன் கீழ் குற்றச்சாட்டினை நிரூபிக்கப்பட வேண்டும் என்றால், **" ஏதேனுமொரு பெண்ணின் மானத்திற்கு பங்கம் ஏற்படுத்தும் உட்கருத்துக்கொண்டு, அல்லது தாக்குதலை அல்லது குற்றமுறு வன்முறையைப் பயன்படுத்துவதன் மூலம் தாம் அதை அநேகமாக ஏற்படுத்தக்கூடும் என்பதை அறிந்து, அப்பெண்ணைத் தாக்குகிற அல்லது அவரிடம் குற்றமுறு வன்முறையைப் பயன்படுத்தியிருக்க வேண்டும் "** என்ற நிலையிலும், 1 ஆம் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள மேற்கண்ட குற்றச்சாட்டுகளை ஆராய்கையில், அ.சா.2 முத்தம்மாள் தான் அளித்த அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தில் ரமேஷ் தனது முடியை பிடித்து இழுத்து அடித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அ.சா.2 தனது சாட்சியத்தில் 1 ஆம் எதிரி தன்னை மானத்திற்கு பங்கம் ஏற்படுத்தும் உட்கருத்துக்கொண்டு தனது முடியை பிடித்து இழுத்து அடித்ததாக சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. எனவே 1 ஆம் எதிரிக்கு எதிரான மேற்படி குற்றச்சாட்டினை அரசு தரப்பில் மேற்படி பிரிவின் உட்கூறுகளுக்கு உட்பட்டு நிரூபிக்கபடவில்லை என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

18. 1, 2 எதிரிகளுக்கு எதிரான **இதச பிரிவு 506(2)–** ன் கீழ் குற்றச்சாட்டினை நிரூபிக்கப்பட வேண்டும் என்றால் **"குற்றமுறு மிரட்டல் செய்திருக்க வேண்டும். அந்த அச்சுறுத்தலானது மரணம் அல்லது கொடுங்காயம் விளைவிப்பதாக, அல்லது சொத்து எதையும் தீயினால் அழிவதை விளைவிப்பதாக, அல்லது ஒரு பெண்ணின் கற்புக்குக் களங்கத்தை சுமத்துவதாக இருத்தல் வேண்டும்"** என்ற நிலையில், எதிரிகளுக்கு எதிரான மேற்படி குற்றச்சாட்டுகள் குறித்து ஆராய்கையில், புகார்தாரரான அ.சா.2 முத்தம்மாள் தான் அளித்த அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தில், எதிரிகள் தன்னையும் தனது கணவரையும் இந்த கட்டையாலயே இரண்டு பேரையும் அடித்து கொன்றுவிடுவேன் என்று மிரட்டியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர் தங்களது சாட்சியத்தில் தங்களை எதிரிகள் குற்றமுறு கொலைமிரட்டல் விடுத்ததாக சாட்சியம் எதுவும் சாட்சியம் அளிக்கவில்லை. எனவே எதிரிகளுக்கு எதிரான மேற்படி குற்றச்சாட்டினை அரசு தரப்பில் மேற்படி பிரிவின் உட்கூறுகளுக்கு உட்பட்டு நிரூபிக்கபடவில்லை என்றே இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

19) அ.சா.4 சாட்சியானவர் புலன் விசாரணை அதிகாரி இல்லை என்பதும் அவர் சம்பவம் குறித்து நேரடியான சாட்சி இல்லை என்பதும், ஆவணங்களின் அடிப்படையில்


RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.04.18 16:25:45 +0530

தான் சாட்சியம் அளித்துள்ளார் என்பதும் தெரியவரும் நிலையில் மேற்படி அ.சா.4–ன் சாட்சியத்தை கொண்டு அரசு தரப்பு வழக்கை நிரூபித்து விட்டதாக கருத முடியாது. இந்நிலையில் அ.சா.4–ன் மூலம் குறியீடு செய்யப்பட்ட அ.சா.ஆ.2 முதல் அ.சா.ஆ.8 வரையிலான ஆவணங்களின் நம்பகத்தன்மை ஏற்கத்தக்கதாக இல்லை என்று இந்நீதிமன்றம் கருதியும் அ.சா.4–ன் சாட்சியத்திற்கு எவ்வித முக்கியத்துவமும் அளிக்க இயலாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

20. மேற்கண்ட விரிவான பரிசீலனையின் அடிப்படையில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கபடவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. அதனடிப்படையில் 1, 2 எதிரிகள் மேற்படி பிரிவுகளின் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

21. முடிவில், 1 ஆம் எதிரியின் மீதான இ.த.ச. 294(b), 323, 324 (2 Counts), 354, 506(2) ஆகிய பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டுகளையும், 2 ஆம் எதிரியின் மீதான இ.த.ச. 294(b), 323, 324, 506(2) ஆகிய பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டுகளையும் அரசுத் தரப்பில் தகுதிநிலை ஐய்யப்பாட்டிற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து கு.வி.மு.ச பிரிவு 248(1) இன் கீழ் 1, 2 எதிரிகளை மேற்கண்ட குற்றச்சாட்டுகளிலிருந்து விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. மேலும், 1, 2 எதிரிகள் எழுதிக் கொடுத்துள்ள பிணையப் பத்திரம் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் உத்தரவிடுவதற்கு வழக்குச் சொத்து எதுவும் இல்லை என்பதால் அதற்கான உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் படித்துப்பார்த்து, பிழைத் திருத்தம் செய்யப்பட்டு, இன்று 18.04.2026 ஆம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.04.18 16:25:52 +0530

நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்,
பெரம்பலூர்.

**I. அரசுத் தரப்பு சாட்சிகள் :–**

1. அ.சா.1 – மணிகண்டன்
2. அ.சா.2 – முத்தம்மாள்
3. அ.சா.3 – பச்சமுத்து
4. அ.சா.4 – திலகவதி(தலைமைக்காவலர்)

**<u>II. அரசுத் தரப்பு சான்றாவணங்கள் :-</u>**

1. அ.சா.ஆ.1 – புகார் வாக்குமூலம்
2. அ.சா.ஆ.2 – முதல் தகவல் அறிக்கை
3. அ.சா.ஆ.3 – பார்வைமகஜர்
4. அ.சா.ஆ.4 – மாதிரிவரைபடம்
5. அ.சா.ஆ.5 – விபத்துப்பதிவேடு (முத்தம்மாள்)
6. அ.சா.ஆ.6 – காயச்சான்று (முத்தம்மாள்)
7. அ.சா.ஆ.7 – விபத்துப்பதிவேடு (பச்சமுத்து)
8. அ.சா.ஆ.8 – காயச்சான்று (பச்சமுத்து)

**<u>III. அரசுத் தரப்பு சான்று பொருள் :-</u>**

இல்லை.

**<u>IV.எதிரிகள் தரப்பு சாட்சி, சான்றாவணம், சான்று பொருள் :-</u>** இல்லை

RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.04.18 16:25:57 +0530

நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்,
பெரம்பலூர்.

<u>குறிப்பு</u>

1. வழக்கு விசாரணையின் போது எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.
2. எந்த சாட்சியும் 3 வாய்தாவுக்கு மேல் விசாரிக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. வழக்கின் முடிவு காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

As per Rule 106 of Criminal Rules of Practice

| S. No. | Name of the Police station | Description of the accused | | Date of | | Explanation of Delay |
|---|---|---|---|---|---|---|
| 1. | Mangalamedu PS, Cr.No.356/2012, U/S. 294(b), 323, 324, 354, 506(2) IPC | Name | A1 - Ramesh | Occurrence | 22.08.2012 | - |
| | | Father's Name | Gopal | Complaint | 23.08.2012 | |
| | | Occupation | Labourar | Apprehension | 23.08.2012 | |
| | | Residence | South street, Thevaiyur village, Veppanthattai Taluk, Perambalur District. | Release on bail | 27.08.2012 | |
| | | Age | 32/2012 | Commitment | --- | |
| | | | | Commencement of Trial | 07.01.2026 | |
| | | | | Closure of Trial | 15.04.2026 | |
| | | | | Sentence or Order | 18.04.2026 | |
| 2. | Mangalamedu PS, Cr.No.356/2012, U/S. 294(b), 323, 324, 354, 506(2) IPC | Name | A2 - Gopal | Occurrence | 22.08.2012 | |
| | | Father's Name | Maakkan | Complaint | 23.08.2012 | |
| | | Occupation | Labourar | Apprehension | - | |
| | | Residence | South street, Thevaiyur village, Veppanthattai Taluk, Perambalur District. | Release on bail | 03.09.2012 (AB) | |
| | | Age | 55/2012 | Commitment | --- | |
| | | | | Commencement of Trial | 07.01.2026 | |
| | | | | Closure of Trial | 15.04.2026 | |
| | | | | Sentence or Order | 18.04.2026 | |

RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.04.18 16:28:33 +0530

Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.

Judicial Form No.61 (See Rule 106)
IN THE COURT OF THE ADDITIONAL MAHILA COURT, PERAMBALUR.

JUDGMENT IN CALENDAR CASE NO. 238 OF 2016

ON THE FILE OF THE ADDITIONAL MAHILA COURT, PERAMBALUR.

| | |
|---|---|
| Complainant | Muthammal |
| Accused | A1.Ramesh, S/o.Gopal<br>A2.Gopal S/o.Maakkan |
| Offence | U/S.294(b), 323, 324, 354, 506(2) IPC |
| Findings | Acquitted |
| Sentence | -- |

| **Serial Number** | **Description of the Accused** | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | **Name** | **Father's/ Husband's Name** | **Caste or race** | **Occupation** | **Residence** | **Age** |
| 1. | Ramesh | Gopal | Male | Labourar | Thevaiyur | 32/2012 |
| 2. | Gopal | Maakkan | Male | Labourar | Thevaiyur | 55/2012 |

| Date of | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **Occurance** | **Complaint** | **Apprehension or Appearance** | **Release on bail** | **Commenceme nt of trail** | **Closure of trial** | **Sentence or Order** | **Explanation of Delay** |
| 22.08.2012 | 23.08.2012 | 23.08.2012 | 27.08.2012 | 07.01.2026 | 15.04.2026 | 18.04.2026 | - |
| 22.08.2012 | 23.08.2012 | 03.09.2012 | 03.09.2012(AB) | 07.01.2026 | 15.04.2026 | 18.04.2026 | - |

RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.04.18 16:28:38 +0530

Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.